STC.No.170/2025 PW1. சந்திரபாண்டி
தேதி– 25.09.2025
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். நான் சின்னமனூரில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 45 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, தற்போது பால்பண்ணை வைத்துள்ளேன், தேங்காய் வியாபாரம் செய்கிறேன். மேற்படி தொழில் மூலம் எனக்கு மாத வருமான எவ்வளவு கிடைக்கும் என்றால் 15–20 ஆயிரம் கிடைக்கும். பால்பண்ணைக்கு பெயர் உள்ளதா என்றால் இல்லை. தேங்காய் வியாபாரத்திற்கு குடோன் உள்ளதா என்றால் இல்லை.

2) பால்பண்ணை மற்றும் தேங்காய் வியாபாரத்தை தவிர்த்து வேறு வியாபாரம் இல்லை என்றால் சரிதான். எதிரி எப்படி எனக்கு தெரியும் என்றால் எதிரி லாரி வைத்துள்ளார், பலவருடமாக வந்து செல்லும்போது அவர் எனக்கு பழக்கமானார். எதிரி பற்றி முழுவிபரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரி, அவர் எந்த ஊர், அவரது அப்பாவின் பெயர் தெரியும். எதிரியின் ஊருக்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் அப்பாவின் பெயர் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றும் அவரது அங்க அடையாளங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எங்கு வைத்து, எந்த தேதியில் பணம் பெற்றார் என்றால் 1.02.2025 ம் தேதியன்று எனது வீட்டில் வைத்து அவரது அவசர தேவைக்காக பணம் கேட்டார்.

3) 01.02.2025 ம் அன்றே நான் பணம் கொடுத்துவிட்டேனா என்றால் சரிதான். ரூ.2 லட்சம் பணம் கொடுத்தேன். மேற்படி பணத்திற்கு ஆதரவாக என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் காசோலை வாங்கினேன். காசோலை தவிர்த்து எதிரியின் அடையாள அட்டையை நான் வாங்கினேனா என்றால் இல்லை. எந்த வங்கியின் காசோலை கொடுத்தார் என்றால் SBI வங்கியின் காசோலை கொடுத்தார், காசோலை எண் தெரியாது. ரூ.2 லட்சம் பணத்தை எவ்வளவு நாளில் திருப்பிக்கொடுப்பதாக கூறினார் என்றால் 10 நாட்களின் திருப்பி

கொடுப்பதாக கூறினார்.

4) வழக்கு விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரி 2 மாதத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதாக கூறினார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்ன தேதியிட்டு எதிரி காசோலை கொடுத்தார் என்றால் 01.02.2025 ம் தேதியிட்டு காசோலை கொடுத்தார். காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியிடம் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வது சம்பந்தமாக கேட்டேனா என்றால் எதிரிக்கு போன் செய்தேன் ஆனால் அவர் எடுக்கவில்லை. புகார் மனுவில் 06.03.2025 ம் தேதி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1 மாதத்தில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான்.

5) உண்மையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால், 10 நாட்களுக்கு பின்பு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி 2 மாதத்திற்கு பின்பு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் 1 மாதத்தில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதால், நான் சொல்வதுபோல் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி பொறுப்புக்காக என்னிடம் எந்த காசோலையையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சின்னமனூரில் ரத்தின மோட்டார்ஸ் பைனான்ஸ் நிறுவனம் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ரத்தின மோட்டார்ஸ் நிறுவனத்தில் நானும் ஒரு பங்குதாரர் என்றால் இல்லை.

6) மேற்படி ரத்தின மோட்டார்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தில் 2023 ஜுன் மாதத்தில் ரூ.1 லட்சம் கடன் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக மேற்படி காசோலையை கொடுத்ததாகவும், மேற்படி தொகையை 2024 மார்ச் மாதத்தில் ரூ.1,20,000/- திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. நான் நிறுவனத்தில் பங்குதாரர் என்ற முறையில் எதிரியிடம் பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தாவா காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையை முழுவதும் நிரப்பி கொடுத்ததாக கூறுகிறேனா என்றால் அவர் காசோலையை எழுதிக்கொண்டுவந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

7) தாவா காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், மற்ற எழுதப்பட்ட எழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் தெரியவில்லை,

எதிரி எழுதிக்கொண்டு வந்து, என் வீட்டில் வைத்து என் பேனாவில் கையொப்பம் செய்தார். நான் சொல்வதுபோல் எனது பேனாவை வாங்கி நிரப்பி இருந்தால் இரண்டு மையினால் காசோலை நிரப்பப்பட்டிருக்கும் என்றும், எதிரி கையொப்பம் செய்த பேனாவை மாதிரி வாங்கி காசோலையை நான் பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள எழுத்துக்கள் எதிரியால் நிரப்பவில்லை என்றால் சரியல்ல. ரூ.2 லட்சம் கைமாற்றுக்கடனாக கொடுத்தேன். நான் தாக்கல் செய்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா காசோலையை என்னிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்காக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு எதிரிக்கு எனக்கும் வரவு-செலவு இருந்ததா என்றால் கம்மியான தொகை வாங்கி திருப்பி கொடுப்பார்.

8) மேற்படி வேறு வரவு-செலவுகளுக்கு எதிரி நேரில் வந்து பணம் வாங்குவாரா என்றால் நேரில் வந்து பணம் வாங்குவார். சின்னமனூரில் எனது வீடு எங்கு உள்ளது எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2025.09.25 18:52:57 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam